மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 121/2020

பெயர் : கோவிந்தராஜ்
சாட்சி – வா.சா–1 நாள்: 21.01.2026

---

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பு)**

1. எனக்கு தற்போது 36 வயது ஆகிறது. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட ஆவணங்களை படித்துப் பார்த்துள்ளேன். எனது தாத்தாவின் பெயர் கருப்பண்ணசாமி ஆகும். எனது தாத்தா கருப்பண்ணசாமி, அவரது சகோதரர் ராமசாமி மற்றும் மூவர் சேர்ந்து கடந்த 16.09.1966 தேதியில் வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் எனது தாத்தா கருப்பண்ணசாமிக்கு க.ச.35 காலையில் பு.ஏ.5.02 பூமி ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே பாகப்பிரிவினையில் எனது தாத்தா கருப்பண்ணசாமிக்கு க.ச.36/1, 253 காலைகளில் பூமி ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. எனது தாத்தாவின் சகோதரர் ராமசாமிக்கு க.ச.35 காலையில் வடபுறமாக பு.ஏ.3.45 ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். க.ச.35, 36/1 காலைகளுக்கு தென்புறமாக கிழ மேலாக க.ச.54ல் வண்டித்தடம் செல்கிறது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்கண்ட கிராம புல எண்களுக்கு உண்டான வரைபடம் என்றால் சரிதான். ( **சித்தம்பளம் கிராம புல வரைபடம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது).** வா.சா.ஆ.2 ஆவணத்தில் பி ஜாபிதாவாக எனது தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விவரத்தில் க.ச.36/1 காலைக்கு செக்குப்பந்தி குறிப்பிடப்பட்டுள்ளது கிழமேல் இட்டேரிக்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் எனது தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்ட பூமிகளுக்கு மேற்படி இட்டேரி வழியாகத்தான் செல்ல வேண்டும் என்று வழி ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

3. ராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட க.ச.35 காலையில் வடபுறமாக பு.ஏ.3.45 ஒதுக்கப்பட்டுள்ள பூமிக்கு வடபுறமாக கிழமேலாக மற்றொரு இட்டேரி க.ச.34

காலையில் செல்கிறது என்றால் சரிதான். ராமசாமியின் பூமிக்கு அவரது பூமிக்கு வடபுறமாக உள்ள இட்டேரியின் வழியாகத்தான் வழி ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது தாத்தா கருப்பண்ணசாமி பூமிகளுக்கு செல்வதற்கு அவரது சகோதரர் ராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட பூமிகளுக்கு வடபுறமாக உள்ள கிழமேல் இட்டேரி வழியாக செல்வதற்கு வழி ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் அதனை பயன்படுத்தி வந்தார்கள்.

4. ராமசாமிக்கு க.ச.35 காலையில் ஒதுக்கப்பட்ட பு.ஏ. 3.45 பூமி ஆனது முழுவதுமாக விவசாய பூமி என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு 18/9/1975 ஆம் தேதியில் எனது தாத்தா கருப்பண்ணசாமி க.ச.27 காலையில் பு.ஏ.5.61 பூமியை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது தாத்தா 18/9/1975 ஆம் தேதியில் கிரயம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். ( **18.09.1975 ஆம் தேதியிட்ட கருப்பண்ணசாமி கிரயம் பெற்ற கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகின்றது**). பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி கிரையம் பெற்ற க.ச.27 காலையில் பு.ஏ.5.61 பூமியானது ராமசாமி பூமிக்கு வடபுறம் உள்ள கிழமேல் இட்டேரிக்கு வடபுறமாக உள்ளது என்றால் சரிதான்.

5. எனது தாத்தா பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி கிரையம் பெற்ற க.ச.27 காலையில் பு.ஏ.5.61 பூமிக்கு சென்றுவர அவரது சகோதரர் ராமசாமிக்கு பாத்தியப்பட்ட க.ச.35 காலையில் கிழகோட்டில் சென்றுவர அனுமதி கேட்டு அனுமதியில் பெயரில் எனது தாத்தா பயன்படுத்தி வந்தார் என்றால் சரிதான். ராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட க.ச.35 காலை பு.ஏ. 3.45 பூமியில் எனது தாத்தா கருப்பண்ணசாமிக்கு எந்த விதமாக சொத்துரிமை பாத்தியமும் கிடையாது என்றால் சரிதான்.

6. 1984ம் ஆண்டு நில உடைமை மேம்பாட்டு திட்டத்தில் உட்பிரிவு செய்யப்பட்ட போது தான் அனுமதியின் பெயரில் பயன்படுத்தி வந்த வண்டித்தடத்தை தனக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று பொய்யாக சொல்லி தனது பெயரில் உட்பிரிவு செய்துகொண்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. க.ச.35/2 காலை என உட்பிரிவு செய்யப்பட்டுள்ள பூமியானது வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை படி ராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட பூமி என்றால் சரிதான். க.ச.35/2 காலை பூமியானது கருப்பண்ணசாமிக்கு

பாத்தியப்பட்டது என்று காண்பிப்பதற்கு பத்திரம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. பட்டா மட்டும் உள்ளது.

7. எனது தாத்தாவிற்கு வண்டித்தடம் பயன்படுத்த அனுமதிக்கப்பட்ட பகுதிக்கு மேல்புறம் உள்ள நிலத்தில் ஒரு பகுதியான 99 செண்டை தனபாக்கியம் என்பவருக்கு 06.09.2012 ல் கிரையம் செய்துகொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி தனபாக்கியத்திற்கு எனது தாத்தா பயன்படுத்தி வந்த வண்டித்தடத்தை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று உரிமை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். க.ச.35/2 பூமியானது ராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட பூமி என்பதால் ராமசாமிக்கும், அவரிடம் கிரையம் பெற்ற நபர்களுக்கும் உரிமை உள்ளது என்பதால் அதனை பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு முழு உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

8. க.ச.35/2 காலையானது இவ்வளவு காலமாக மேய்ச்சல் நிலமாக இருந்தது என்றால் நடைபாதையாக இருந்தது. ராமசாமி தனபாக்கியத்திற்கு விற்றது போக மீதம் உள்ள பூமியை வனிதா என்பவருக்கு விற்றுவிட்டார் என்றால் சரிதான். மேற்படி வனிதாவை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தனபாக்கியம் கிரையம் பெற்ற 99 செண்ட் பூமிக்கு சென்று வருவதற்கு க.ச.35/2 வண்டித்தடத்தின் வழியாக தான் சென்று வந்து பயன்படுத்தி வந்தார் என்றால் சரியல்ல. தனபாக்கியம் கிரையம் பெற்ற பூமியில் 49 1/2 செண்ட் பூமியை 2ம் பிரதிவாதி பாக்கியலட்சுமிக்கு விற்றுவிட்டார் என்றால் சரிதான். மீதம் உள்ள 49 1/2 செண்ட் பூமியை 1ம் பிரதிவாதி தங்கவேல் மற்றும் 3ம் பிரதிவாதி பாலமுருகன் ஆகியோர்களுக்கு 03.10.2019 தேதியில் விற்றுவிட்டார் என்றால் சரிதான்.

9. பாலமுருகனின் கிரைய பூமி தென்புறமாக உள்ளது என்றால் சரிதான். பாலமுருகனின் கிரைய பூமிக்கு சென்று வருவதற்கு க.ச.35/2 வண்டித்தடத்தை பயன்படுத்தலாம் என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது வரை பிரதிவாதிகள் மூவரும் க.ச.35/2 வண்டித்தடத்தை பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. ராமசாமி தனபாக்கியத்திற்கு விற்பனை செய்த விவரமும், தனபாக்கியம் பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்த விவரமும் தெரிந்தும், பிரதிவாதிகள் தடத்தினை பயன்படுத்தி வருகின்ற விவரமும் தெரிந்தே கடந்த 23.10.2019 தேதியில் எனது பெயருக்கு வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். உரிமை உள்ளதால் எழுதிவைத்துள்ளார்.

10. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் க.ச.35/2 காலையை வண்டித்தடமாக குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரியல்ல. க.ச.35/2 காலையானது வண்டிதடத்திற்காக பயன்படுத்த மட்டுமே எனது தாத்தாவிற்கு உரிமை வழங்கப்பட்டுள்ள போது, அந்த பூமி அவருக்கு பாத்தியப்பட்டது போல் பொய்யாக குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ–1 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டவுடன் க.ச.35/2 காலை பூமியை நான் கம்பிவேலி அமைக்க முயற்சி செய்தேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தடுத்து பிரச்சனை செய்தார்கள் என்றால் சரிதான்.

11. நான் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாக சொல்லும் புகாரின் நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார் மனு ரசீது தாக்கல் செய்துள்ளேன். போலீசார் எனது புகாரை விசாரித்து வண்டித்தடத்தில் எனக்கு பயன்படுத்த மட்டுமே உரிமை உள்ளது என்று தெரிந்தவுடன் நான் சொல்வது பொய் என்பதால் எனது புகாரின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றால் சரியல்ல. க.ச.35/2 காலைக்கு எனது தாத்தா பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் பிரதிவாதிகளுக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. அவ்வாறு தெரிய வந்தவுடன் எனது தாத்தா பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்வதற்கு வட்டாட்சியரிடம் மனு கொடுத்தார்கள் என்றும், மேற்படி மனுவை விசாரித்த வட்டாட்சியர் இந்த வழக்கு நிலுவையில் உள்ளதால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

12. ராமசாமி தற்போது உயிருடன் இல்லை அவர் 12 ஆண்டுகளுக்கு முன்பே இறந்துவிட்டார். க.ச.35/2 காலையில் சட்டத்திற்கு புறம்பாக செய்யப்பட்ட உட்பிரிவை வைத்து நான் அந்த பூமியை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. க.ச.35/2 காலை வண்டித்தடத்தை பயன்படுத்துவதற்கு பிரதிவாதிகள் எனக்கு எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பிரதிவாதிகள் பயன்படுத்துவதற்கு ஆட்சேபனை செய்கிறேன் என்றால் சரிதான்.

13. க.ச.35/2 எனது தாத்தா பெயரில் செய்யப்பட்ட உட்பிரிவு எங்களுக்கு சொத்து உரிமையாக கருத முடியாது என்றால் சரியல்ல. நான் நல்லெண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்யாமல் அடுத்தவரின் பூமியை ஆக்கிரமிப்பு செய்யவேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி

செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் ஆவணங்களுக்கு முரணாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.01.21 19:00:56 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.